# தாரமங்கலம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரண கூட்டம்

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

2025 ஆம் ஆண்டு ஜீன் மாத கூட்டத்தொடர் 15.12.2025 ஆம் தேதி திங்கள் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகராட்சி மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

முன்னிலை :– திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,
நகராட்சி மன்ற தலைவர்,
தாரமங்கலம் நகராட்சி.

பொருள் எண்.1097 (1)

தாரமங்கலம் நகராட்சி பகுதிகளில் ஆகஸ்ட் (26.08.2025 முதல் 31.08.2025 வரை) மற்றும் செப்டம்பர் (01.09.2025 முதல் 30.09.2025 வரை) அக்டோபர் (01.10.2025 முதல் 31.10.2025 வரை) நவம்பர் (01.11.2025 முதல் 30.11.2025 வரை) மாதம் நிகழப்பெற்ற பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 26.08.2025 முதல் 31.08.2025 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 01.09.2025 முதல் 30.09.2025 | 10 | 6 | 16 | 4 | 9 | 13 | 0 | 0 | 0 |
| 01.10.2025 முதல் 31.10.2025 | 13 | 5 | 18 | 8 | 5 | 13 | 0 | 0 | 0 |
| 01.11.2025 முதல் 30.11.2025 | 5 | 7 | 12 | 12 | 4 | 16 | 0 | 0 | 0 |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.550/2023/எச்1)

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.1098 (2)

தாரமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள வார்டுகளுக்கு பொதுசுகாதாரப்பிரிவு கீழ் தினசரி டெங்கு வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிக்காக வீடு வீடாக சென்று காய்ச்சல் கணக்கெடுப்பு பணிக்கு தற்காலிகமாக DBC பணிக்கு வீரதமிழச்சி மகளிர் குழு 13 நபர்கள் மற்றும் ஜான்சி ராணி மகளிர் குழு 14 நபர்கள் கொண்ட ஆக மொத்தம் 27 நபர்களுக்கு) ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு குறைந்தபட்ச விலைப்புள்ளி அடிப்படையில் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது ஒப்பந்தபுள்ளி காலம் 31.10.2025 ஆம் தேதியுடன் முடிவடையவுள்ளதால், பொதுசுகாதார பணிகள் அவசியத்தை கருத்தில் கொண்டு பணிகள் மேற்கொள்ள ஜான்சிராணி மகளிர் குழு மற்றும் வீரதமிழச்சி மகளிர் குழு இரண்டிற்கும் மூன்று மாத காலங்களுக்கு பணி நீட்டிப்பு செய்திட (நவம்பர்–2025 முதல் ஜனவரி–2026 வரை) மூன்று மாதங்களுக்கு நாள் ஒன்றிற்கு ஊதியம் ரூ.498/– என 27 நபர்களுக்கு மூன்று மாதங்களுக்கான செலவினம் தொகை ரூ.12.70/– இலட்சம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு, சிக்கன்குனியா நோய் பரவலை தடுக்க 27 நபர்கள் கொண்ட வீரத்தமிழச்சி மற்றும் ஜான்சி ராணி மகளிர் சுய உதவி குழுவிற்கு 11/2025 முதல் 01/2026 மூன்று மாதங்களுக்கு பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியத்தை கருதி பணி நீட்டிப்பு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சியில் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.1099 (3)

தாரமங்கலம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் ஆண்–15, பெண்–15 மொத்தம் 30 நபர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள்ள்4 நபர்கள் அலுவலக உதவியாளர்கள்–2 நபர்கள் மற்றும் ஓட்டுநர் –1 நபர் ஆகிய பணியாளர்களுக்கு 2025–2026 ஆம் ஆண்டிற்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சீருடைகள் மற்றும் தையல் கூலி வழங்கிட கோ–ஆப்–டெக்ஸ் நிறுவனம் (அ) அரசு சார்ந்த நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி பெற உத்தேச செலவினம் ரூ.1.45/– இலட்சம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. தாரமங்கலம் நகராட்சி பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சீருடைகள் மற்றும் தையல்கூலி வழங்க இருப்பதால் கோ–ஆப்–டெக்ஸ் நிறுவனம் (அ) அரசு சார்ந்த நிறுவனம் மூலம் விலைப்புள்ளி பெற உத்தேச செலவினம் ரூ.1.45/– இலட்சம் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1100 (4)**

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளின் சட்டம் (திருத்தம்) 2024, திருத்த சட்டம் 25/2024–இன் பிரிவு 78(3)(iii)–இல் 3 ஆண்டுகள் குத்தகை இனமான வணிக வளாக கடைகளை 12 ஆண்டுகள் வரை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை என நீட்டித்து வழங்க (Twelve in the Case of Commercial Shopping Complexes) வரையறுக்கப்பட்டு, இச்சட்ட திருத்தம் ஆனது 06.01.2025 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13369/ஆர்–2/2025 நாள்.10.05.2025 கடிதத்தில், நகராட்சிகளில் உள்ள வணிக வளாக கடைகளை 9 ஆண்டு கால குத்தகை உரிமக்காலம் முடிவடையும்/முடிவடைய உள்ள கடைகளுக்கான குத்தகை உரிம காலத்தினை அடுத்த மூன்றாண்டுகளுக்கு நீடித்து, அதாவது 12 ஆண்டுகள் வரை குத்தகை உரிம காலத்தை நீட்டிப்பு செய்து, குத்தகை உரிமத்தொகையை 5 சதவீதம் ஒவ்வொரு ஆண்டும் உயர்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1309/2025/அ1)

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1101 (5)**

தாரமங்கலம் நகராட்சி, வாரச்சந்தை பகுதியில் உள்ள நவீன இறைச்சிக்கூடம் (ஆடு அடிக்கும் தொட்டி) கட்டுமானப்பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதால் ஆடு அடிக்கும் தொட்டியினை 2025–2026 ஆம் ஆண்டிற்கு ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1308/2025/அ1)

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.1102 (6)

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான அரியபுத்திரன் பூங்கா 2025–2026 ஆம் ஆண்டிற்கு ஏலம் விடப்பட்டதில் உயர்ந்தபட்ச ஏலத்தொகையான ரூ.64,620/–க்கு ஏலம் எடுத்த திரு.சௌஜீத் கன்ஸ்டிரக்சன்ஸ், என்பருக்கு ஏலகாய உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. உயர்ந்தபட்ச ஏலத்தொகையை ஏலம் எடுத்த திரு.சௌஜீத் கன்ஸ்டிரக்சன்ஸ் என்பவருக்கு ஏலகாய உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.15/2024/அ1)

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.1103 (7)

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை 2025–2026 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக்குத்தகை ஏலமானது 31.03.2026 ஆம் தேதியுடன் முடிவடைய உள்ளதால் தினசரி சந்தையினை 2026–2027 ஆம் ஆண்டிற்கு ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.15/2023/அ1)

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.1104 (8)

தாரமங்கலம் நகராட்சி, பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கட்டண கழிப்பிட 2025–2026 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக்குத்தகை ஏலமானது 31.03.2026 ஆம் தேதியுடன் முடிவடைய உள்ளதால் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தினை 2026–2027 ஆம் ஆண்டிற்கு ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.212/2025/அ1)

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1105 (9)**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதியதாக கட்டப்பட்ட நகராட்சி சமுதாய கூடத்திற்கு (நீளம்=60 அடியும், அகலம்=60 அடியும் ஆக மொத்தம் 3600 சதுரடி) வாடகை நிர்ணயம் செய்ய கீழ்கண்ட விவரப்படி தனியார் மண்டபங்களிடமிருந்து வாடகை நிர்ணயம் விவரப்பட்டியல் பெறப்பட்டுள்ளது.

**தனியார் மண்டபங்களின் வாடகை விவரம்**

| வ.எண் | மண்டபத்தின் பெயர் | சதுரடி | நிகழ்ச்சி நிரல் | வாடகை தொகை |
|---|---|---|---|---|
| 1. | TPK மஹால் | 3332 ச.அடி | திருமணம் (24 மணிநேரம்) | 25,000/– |
| | | | நிச்சயதார்த்தம் (12 மணிநேரம்) | 15,000/– |
| 2. | செங்குந்தர் திருமண மண்டபம் | 6140 ச.அடி | திருமணம் (24 மணிநேரம்) | 35,000/– |
| | | | நிச்சயதார்த்தம் (12 மணிநேரம்) | 20,000/– |

எனவே தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்வது மன்றமே முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1072/2025/இ1)

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1106 (10)**

தாரமங்கலம் நகராட்சி, நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனை ஒழுங்கு படுத்துதல்) சட்டம் 2014– ன் பிரிவு 38 (1) ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனை ஒழுங்கு படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015 விதி 11–ன் கீழ் அமைக்கப்பட வேண்டிய நகர விற்பனைக்குழுவின் 6 எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்கு இடஒதுக்கீட்டினை பின்பற்றி தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கான அறிவிப்பினை தினசரி இரண்டு தமிழ் நாளிதழ்களில் பிரசுரம் செய்வதற்கும், பிரசுரிக்கப்பட்ட பின்பு அதற்கான கட்டணம் ரூ.41983/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.537/2025/எப்1)

2. தினசரி நாளிதழ்களில் நகர விற்பனைக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் அறிவிப்பினை வெளியிடுவதற்கானகட்டணத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1107 (11)**

தாரமங்கலம் நகராட்சியில், வார்டு எண்.19, தெற்கு ரதவீதியில் மழைநீர் வடிகாலில் தண்ணீர் தேங்கி வெளியே செல்லாமல் இருப்பதால் இப்பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.4.40/–இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1108 (12)**

தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண்.3, பாரக்கல்லூர் பகுதியில் உள்ள அங்கன்வாடி பள்ளிக்கு மின் இணைப்பு வேண்டியும் மின் கம்பம் அமைத்தும் மின் கம்பி கேபிள் அமைத்து இரு மின் விளக்குகள் அமைத்து தர நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் மனு கொடுத்துள்ளார். மனுவின் அடிப்படையில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.0.60/– இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1109 (13)**

தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண். 22, அம்பேத்கார் நகர் பொது கழிப்பிடம் அருகில் மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச செலவினம் ரூ.5.00/–இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1110 (14)**

தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண்.7, பத்ரகாளியம்மன் கோவில் அருகில் நங்கவள்ளி மெயின்ரோடு மழைநீர் வடிகால் மற்றும் கல்வெட்டு அமைத்தல் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.5.00/—இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1111 (15)**

தாரமங்கலம் நகராட்சியில் 1 முதல் 27 வார்டுகளில் உள்ள குண்டு குழியுமாக உள்ள சாலைகளை மேம்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் இருந்து இரண்டாம் நிலை நகராட்சிக்கு ரூ.5.00/— இலட்சத்தில் சாலை மேம்படுத்தி பணிகளை மேம்படுத்திக்கொள்ள கடிதம் வரப்பெற்றது. வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1112 (16)**

தாரமங்கலம் நகராட்சியில் அலுவலக பணிக்கான காலியாக உள்ள பணி இடங்களை நிரப்பப்பட்டுள்ளது. தற்போது அவர்களின் திட்டப்பணிகள் பதிவேற்றம் செய்வதற்கும் Online மூலம் பணிகளை மேற்கொள்வதற்கும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலர்களுக்கு திட்டப்பணிகள் முன்னேற்றத்திற்காகவும் கணினி தேவைப்படுவதாலும் அலுவலர்களுக்கான மொத்தம் 4 கணினிகள் தேவைப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.3.40/— இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1113 (17)**

தாரமங்கலம் நகராட்சி, கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் **2025–2026** ஆண்டின் திட்டத்தில் புதிய குடிநீர் திட்டப்பணி மதிப்பீடு ரூ.**540.00** இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 9365/2025/P1 நாள்: 30.08.2025 –ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, **16.10.2025–**தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் மூன்று ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சி கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் **2025–2026** ஆண்டின் திட்டத்தில் புதிய குடிநீர் திட்டப்பணி | ரூ.540.00 | சிவா இன்ஜினியரிங் ஒர்க், மேச்சேரி | மதிப்பீட்டை –0.06% விட குறைவு |
| | | | பழனியப்பன் & கோ, பவானி | 0.29% மதிப்பீட்டை விடஅதிகம் |
| | | | NAP & Co. மேட்டூர் | 1.12% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முன் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, சிவா இன்ஜினியரிங் ஒர்க் **–0.06%** குறைவு ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1114 (18)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.7–ல் சின்ன ஏரிக்கரை மயானப்பகுதியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கும் மயானத்தில் சென்று வரும் மக்களுக்கு பயன்படும் வகையில் அடிப்படை தேவைக்காக மயானத்திற்கு போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் டேங் அமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50/– இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1115 (19)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.17 புதுதெரு–6, ஜெகநாதன் வீடு அருகில் மற்றும் வார்டு எண்.1 கருக்குப்பட்டி வார்டு எண்.6 பிள்ளையார் கோவில் அருகில் வார்டு எண்.26, கீழ்சின்னாக்கவுண்டம்பட்டி மற்றும் வார்டு எண்.16, ஆணைகவுண்டன் வளவு, ஐய்யனாரப்பன் கோவில் பகுதியில் பொதுமக்களுக்கு ஆபத்தான நிலையில் திறந்த நிலையில் கிணறுகள் உள்ளது. இந்த பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு ஆபத்தாக இருப்பதால் இந்த கிணறுகளை கம்பி வேலி அமைத்து தர உத்தேச செலவினம் ரூ.3.50/–இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1116 (20)**

தாரமங்கலம் நகராட்சி, வருவாய் நிதியின் கீழ் 2025–2026 ஆம் ஆண்டு 1 முதல் 27 வார்டுகளில் உள்ள குண்டு குழியுமாக உள்ள சாலைகளை மேம்படுத்தும் பணி மதிப்பீடு ரூ.2.15/– இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் செ.மு.ஆ.எண். 18464/2023/Do1 நாள்: 07.10.2025–ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 21.11.2025 தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சியில் வருவாய் நிதியின் கீழ் 2025–2026 ஆம் ஆண்டு 1 முதல் 27 வார்டுகளில் உள்ள குண்டு குழியுமாக உள்ள சாலைகளை மேம்படுத்தும் பணி | ரூ.2.15/– | அருள்லஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், தாரமங்கலம் | மதிப்பீட்டை –0.09% விட குறைவு |
| | | | G.S. & Co, தொளசம்பட்டி | 2.09% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முன் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, அருள்லக்ஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், **–0.09**% குறைவு ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1117 (21)**

தாரமங்கலம் நகராட்சி, சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத்திட்டம் **2024–2025** ஆண்டின் திட்டத்தில் வார்டு எண்.**14**, பேர்லேண்ட்ஸ் நகரில் போர்வெல் மற்றும் மினி பவர் பம்ப் அமைத்தல் பணி மதிப்பீடு ரூ.**4.10/–** இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் செ.மு.ஆ.எண்.3141/2024/அ2 நாள்:16.10.2025 ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, **21.11.2025** தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2024–2025 ஆண்டின் திட்டத்தில் வார்டு எண்.14, பேர்லேண்ட்ஸ் நகரில் போர்வெல் மற்றும் மினி பவர் பம்ப் அமைத்தல் பணி | ரூ.4.10/– | அருள்லஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், தாரமங்கலம் | மதிப்பீட்டை –0.11% விட குறைவு |
| | | | G.S. & Co, தொளசம்பட்டி | 2.02% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முன் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, அருள்லக்ஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், –0.11% குறைவு ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1118 (22)**

தாரமங்கலம் நகராட்சி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத்திட்டம் **2024–2025** ஆண்டின் திட்டத்தில் வார்டு எண்.**9** அருணாச்சலம்புதூர் கபிலேஷ் வீடு சந்து அருகே போர்வெல் மற்றும் மினி பவர் பம்ப் அமைத்தல் பணி மதிப்பீடு ரூ.**4.10/–** இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் செ.மு.ஆ.எண். 3141/2024/அ2 நாள்: 16.10.2025–ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, **21.11.2025–**தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2024–2025 ஆண்டின் திட்டத்தில் வார்டு எண்.9 அருணாச்சலம்புதூர் கபிலேஷ் வீடு சந்து அருகே போர்வெல் மற்றும் மினி பவர் பம்ப் அமைத்தல் பணி | ரூ.4.10/– | அருள்லஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், தாரமங்கலம் | மதிப்பீட்டை –0.11% விட குறைவு |
| | | | G.S. & Co, தொளசம்பட்டி | 2.34% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முன் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, அருள்லக்ஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், –0.11% குறைவு ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.1119 (23)

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.24, பிள்ளையார் கோவில் முதல் எல்லம்மாள் தெரு வரை மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மதிப்பீடு ரூ.5.00/– இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1060 நாள்.14.07.2025–ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 28.08.2025–தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.24, பிள்ளையார் முதல் எல்லம்மாள் தெரு வரை மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 5.00/– | **V&V Construction** | –0.07% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | **Arul lakshmi Construction Tharamangalam** | +0.46% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முன் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **V&V Construction** –0.07% குறைவு ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண்.2202/2024/இ1)
2. மேற்காணும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

பொருள் எண்.1120 (24)

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.24–இல் உள்ள பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அடிப்படை வசதிக்காக கழிப்பறை செப்டிக்டேங் அமைத்தல் பணி மதிப்பீடு ரூ.4.80/– இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1048 நாள்.14.07.2025 ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, 29.08.2025 தேதியன்று முதன்முறையாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ. (ல) | ஒப்பந்ததாரர் பெயர்மற்றும் முகவரி | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.24–இல் உள்ள பொது மக்களின் பயன்பாட்டிற்கு அடிப்படை வசதிக்காக கழிப்பறை செப்டிக்டேங் அமைத்தல் பணி | 4.80/– | **V&V Construction** | –0.28% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | **Arul lakshmi Construction Tharamangalam** | +0.27% மதிப்பீட்டை விடஅதிகம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முன் அனுமதிக்கும் பார்வைக்கும் முடிவிற்கும் வேண்டி மன்றப்பொருள் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மின்னணு முறையில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவீதம் கொடுத்துள்ள, **V&V Construction** –0.28% குறைவு ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1121 (25)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.5 வெட்னி கரடு, வார்டு எண்.16, மோட்டுப்பட்டி பகுதியில் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. தற்போது பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி திறந்து வைக்கப்பட உள்ளதால் வெளிக்கொணர்வு முறையில் தண்ணீர் திறந்து வைக்க ஆட்கள் தேவைப்படுகிறது. ஆகையால் இதற்கான உத்தேச செலவினம் ரூ.4.00/– இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1122 (26)**

தாரமங்கலம் நகராட்சியில் 27 வார்டுகள் உள்ளன. பொதுமக்களின் அடிப்படை தேவைக்காக தெருவிளக்குகள் LED 1477 தெருவிளக்குகள் அமைக்கப்பட்டது. ஒரு சில வார்டுகளில் பழைய சோடியம் லைட்டுகள், டியூப் லைட்டுகள் உள்ளன. தற்போது பருவகாலம் என்பதால் பழைய லைட்டுகள் பழுதான நிலையில் உள்ளது. இதனை சரி செய்யவும் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும் உத்தேச செலவினம் ரூ.3.00/– இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1123 (27)**

தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண்.17–ல் ஜலகண்டாபுரம் மெயின் ரோடு அருகில் மழைநீர் வடிகாலில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. தற்போது இந்த சிறுபாலம் அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00/– இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1124 (28)**

மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.72405/2023/ஜிசி6, நாள்.16.06.2025–இன் படி, முதல்வரின் முகவரித்துறை, மக்களுடன் முதல்வர் நான்காம் கட்டமாக உங்களுடன் ஸ்டாலின் திட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் பொதுமக்களுக்கு பல்வேறு விதமான அரசு துறை சேவைகளுக்கு மேற்படி முகாம் இந்நகராட்சி மூலம் மேற்கொள்ளவும், மேற்படி முகாம் நாட்களில் 13 துறைகளுக்கும் தேவையான இட வசதி, கழிவறை வசதி, முகாம்களில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் பொறுப்பு அலுவலர்களுக்கு உணவு ஏற்பாடுகள், குடிநீர் வசதி, கணினி வசதி, இணையதள வசதி, பிரிண்டர் வசதி, ஸ்கேனர் வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான Ramp வசதி செய்தல். பேனர் விளம்பரம் செய்ய

மற்றும் இதர அத்தியாவசிய பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00/– இலட்சத்திற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1055(33) நாள்.14.07.2025–இல் அனுமதி பெறப்பட்டு, தற்போது 10 முகாம் நடைபெற்று முடிவடைந்துள்ளது. மேற்படி நடைபெற்ற 5 முகாம்களுக்கு ரூ.5.00/– இலட்சம் செலவிடப்பட்டது. தற்போது 5 முகாம் நடைபெற்றதற்கு ரூ.5.00/– இலட்சம் பில் தொகை வழங்க வேண்டியுள்ளதால் கூடுதல் செலவினம் ரூ.5.00/– இலட்சம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1125 (29)**

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, வெட்னிகரடு கிழக்கு பகுதியில் உள்ள சர்வே எண்.73/1B, 73/2, 73/3, 73/4B2 மற்றும் 74/5B-இல் 2.743 ஏக்கர் (அ) 11104 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் 48 மனைகளாக பிரிக்கப்பட்டு, உதவி இயக்குநர் உறுப்பினர் செயலர் (பொ) சேலம், உள்ளூர் திட்டக்குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களால் அனுமதி எண்.SLM/WC42MGDY/49827/2025/TCP APPROVAL NO.ம.வ/ந.ஊஇ எண்.100/2025 PLANNING PERMISSION NO.116/2025 மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள தார்சாலைகள் மற்றும் பொது உபயோக இடம் ஆகியவற்றின் மொத்த பரப்பளவு 4967.71 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தை நகராட்சி ஆணையாளருக்கும் இனிமேல் இப்பதவி வகிப்பவருக்கும் தான பத்திர ஆவண எண்.6618/2025–இன் மூலம் 1.திருமதி.எஸ்.நாகநந்தினி 2.திரு.எ.முருகேசன் என்பவர் ஒப்படைத்துள்ளார். மேற்படி பொது ஒதுக்கீடு தார்சாலை, குடிநீர் வசதி, தெருவிளக்கு மற்றும் மழைநீர் வடிகால் நகராட்சி வசம் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ளவும், மனைப்பிரிவின் ஒப்புதலுக்கும் அனுமதி வழங்ககோரி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1206/2025/எப்1)

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1126 (30)**

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, முனியகவுண்டன் வளவு பகுதியில் உள்ள சர்வே எண்கள்.200/1B, 210/1B1 211/1-இல் 2.98 ஏக்கர் (அ) 12059.63 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் 63 மனைகளாக பிரிக்கப்பட்டு, உதவி இயக்குநர் உறுப்பினர் செயலர் (பொ) சேலம், உள்ளூர் திட்டக்குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களால் அனுமதி எண்.SWP/DTCP/SALEM/LAYOUT NO.91/2025 PLANNING PERMISSION NO.39/2025 மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள தார்சாலைகள் மற்றும் பொதுஉபயோக இடம் ஆகியவற்றின் மொத்த பரப்பளவு 5061.11 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தை நகராட்சி ஆணையாளருக்கும் இனிமேல் இப்பதவி வகிப்பவருக்கும் தான பத்திர ஆவண எண்.2159/2025–இன் மூலம் திரு.எம்.பிரபு மற்றும் நான்கு நபர்கள் ஆகியோர் ஒப்படைத்துள்ளார்கள். மேற்படி பொது ஒதுக்கீடு தார்சாலை, குடிநீர் வசதி, தெருவிளக்கு மற்றும் மழைநீர் வடிகால் நகராட்சி வசம் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ளவும், மனைப்பிரிவின் ஒப்புதலுக்கும் அனுமதி வழங்ககோரி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.434/2025/எப்1)

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1127 (31)**

தாரமங்கலம் நகராட்சியில் 1 முதல் 27 வார்டுகளில் உள்ள பொதுமக்களின் பயன்பாட்டிற்கு சமுதாய கூடமானது பயன்பாட்டில் உள்ளது. அதற்கு தேவையான Chair, Table கொள்முதல் செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.4.90/– இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**பொருள் எண்.1128 (32)**

தாரமங்கலம் நகராட்சியில் **1** முதல் **27** வார்டுகளில் உள்ள பொதுமக்களின் பயன்பாட்டிற்கு சமுதாய கூடமானது பயன்பாட்டில் உள்ளது. அதற்கு தேவையான Dining Table, Gas Stove மற்றும் சமையல் பாத்திரங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.**4.90/–** இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**(ஒம்) திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகர் மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்(மு.கூ.பொ),**
**தாரமங்கலம் நகராட்சி.**